**முதன்மை மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,வந்தவாசி.**

முன்னிலை - **திரு.கா.நிலவரசன், பி.ஏ., பி.எல்.,**
முதன்மை மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வந்தவாசி.

2017-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 21-ஆம் நாள் செவ்வாய்கிழமை
(திருவள்ளுவராண்டு 2044, துர்முகி வருடம், பங்குனி திங்கள் 08-ஆம் நாள்)

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.57/2008**

அரசுக்காக,
உதவி ஆய்வாளர்,
அனைத்து மகளிர் காவல் நிலையம்,
வந்தவாசி, திருவண்ணாமலை.
குற்ற எண்.1/2007. . . .குற்றமுறையீட்டாளர்.

எதிர்

1. சிவக்குமார், வயது 27/07,
த/பெ. ராஜகோபால்,

2. ராஜகோபால், வயது 60/07,
த/பெ. பூங்காவனம்,

3. தனபாக்கியம், வயது 50/07,
க/பெ. ராஜகோபால்,

4. பெருமாள், வயது 30/07,
த/பெ. ராஜகோபால்

5. அஞ்சலா, வயது 27/07
த/பெ. பெருமாள்,

6. முனியம்மாள், வயது 19/07
க/பெ. சிவக்குமார்.
அனைவரும் வசிப்பது. பஜனை கோவில் தெரு,

தெய்யார் கிராமம், வந்தவாசி தாலுக்கா. . . . எதிரிகள்.

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தில் 19.07.2008 அன்று கோப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, குற்றமுறையிடுபவர் தரப்பில் கற்றறிந்த அரசு குற்றவியல் உதவி வழக்கறிஞர் நிலை-1 அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.T.G.எழிலரசன், அவர்கள் ஆஜராகியும், விசாரணை நடைபெற்று, இருதரப்பும் கேட்கப்பட்டும், ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## தீர்ப்பு ரை

வந்தவாசி தாலுக்கா, தெய்யார் கிராமத்தில் எதிரி-1 சிவக்குமார் என்பவருக்கும், சாட்சி ஜெயந்திக்கும் 03.09.2004 அன்று 1ம் எதிரியின் வீட்டில் திருமணம் நடைபெற்றதாகவும், திருமணம் நடந்த நாளிலிருந்தே எதிரிகள் 2 முதல் 5 இவர்களின் தூண்டுதலின் பேரில் எதிரி-1ம் சேர்ந்து வரதட்சணையாக வாங்கி வரசொல்லி அடித்தும், அசிங்கமாக பேசியும், சாப்பாடு போடாமல் கொடுமைப்படுத்தியதாகவும், அதன்பிறகு சாட்சி ஜெயந்தியிடம் எதிரிகள் 1 முதல் 5 வரையானவர்கள் வரதட்சணை வாங்கி வராதவளுக்கு தங்கள் வீட்டில் இடம் இல்லை என்று சொல்லி அடித்து, தாங்கள் அடித்ததை வெளியில் சொன்னால் உன்னையும், உன் குடும்பத்தாரையும் கூன்டோடு ஒழித்துவிடுவோம் என்று கூறி வீட்டைவிட்டு துரத்தியதாகவும், பிறகு எதிரி-1 தெய்யார் கிராமம், பெருமாள் கோவிலில் எதிரி-6 முனியம்மாள் என்பவரை 30.11.2009 அன்று இரண்டாவது திருமணம் செய்து கொண்டதாகவும், எனவே எதிரிகள் மீது பிரிவுகள் 498(A), 506(i), 494 r/w 109 இதச மற்றும் பிரிவு 4 வரதட்சணை தடுப்பு சட்டத்தின் படி அனைத்து மகளிர் காவல் நிலைய காவல் ஆய்வாளர் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. இவ்வழக்கில் எதிரிகளுக்கு, குற்றமுறையிடுபவர் தரப்பில் வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச. பிரிவு 207-ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டு போதிய கால அவகாசம் அளிக்கப்பட்டு, எதிரிகளிடம் அவர்கள் மீது பிரிவுகள் 498(A), 506(i), 494 உ/இ 109 இதச மற்றும் பிரிவு 4 வரதட்சணை தடுப்பு சட்டத்தின் படி குற்றச்சாட்டு வனைந்து வினவியபோது எதிரிகள் குற்றச்சாட்டை மறுத்தார்கள்.

3. எதிரிகள் குற்றச்சாட்டை மறுத்து கூறியதால் எதிரிகள் மீதான குற்றச்சாட்டு பற்றி நிரூபணம் செய்யும்பொருட்டு அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.8 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டது.

***<u>அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்.</u>***

*4. **அ.சா.1. ஜெயந்தி த/பெ. சிவகுமார் :-** தனது சாட்சியத்தில், 2004ம் வருடம் தெய்யார் கிராமத்தில் திருமணம் நடந்தததாகவும், தன் மாமியார் வீட்டில் குடும்பம் நடத்தியதாகவும், தனக்கு 7 பவுன் நகையும், மாப்பிள்ளைக்கு 1 பவுன் நகை கேட்டதாகவும், அது பத்தவில்லை என்று ஓரகத்தி, மாமனார், மாமியார் சொல்லி தன் கணவர் குடித்துவிட்டு வந்து அடிப்பதாகவும், பின்னர் 50 ஆயிரம் கேட்டு தன்னை வீட்டை விட்டு துரத்திவிட்டார்கள் எனவும், தன் அம்மாவிடம் கேட்டபோது அவர்கள் 5 ஆயிரம் முடியும் என்று 5 ஆயிரம் கொடுத்துவிட்டதாகவும், தன் கணவர் தன்னை அழைத்து சென்று தன் அம்மாவிட்டில் விட்டு விட்டு தான் தனி வழி போய்விட்டேன் என்று பஞ்சாயத்து செய்ததாகவும், 50 ஆயிரம் பணமும், இருசக்கர வாகனமும் கேட்டு தன்னை அடித்து துரத்திவிட்டதாகவும், தனக்கு குழந்தை பிறந்து 7 மாதம் ஆகி இருந்ததாகவும், தான் கணவர் வீட்டிற்கு போன போது திருவிழா சமயம் தன்னை அடித்து தன் குழந்தையை பிடிங்கி கொண்டு விட்டதாகவும், பின்னர் தன் அம்மாவிட்டில் 1 மாதம் இருந்ததாகவும், முனியம்மாள் என்பவரை தன் கணவர் 2ம் திருமணம் செய்துக்கொண்டதாகவும், பின்னர் 2007ம் வருடம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும், சாட்சியம் அளித்துள்ளார். புகார் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.*

*5. **அ.சா.2. வீரம்மாள் க/பெ. பெருமாள் :-** தனது சாட்சியத்தில், தனது பெண்ணிற்கு திருமணம் செய்து வைத்ததாகவும், தன் பெண்ணை அடித்து துரத்தி 2ம் திருமணம் செய்தார்கள் எனவும், அதனால் மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும், 50 ஆயிரம் கேட்டு 5 ஆயிரம் கொடுத்ததாகவும், திரும்பியும் பணம் கேட்டு அடித்ததாகவும், எல்லாம் எதிரிகளும் கும்பலாக சேர்ந்து அடித்து துரத்திவிட்டதாகவும், சாட்சியம் அளித்துள்ளார்.*

*6. **அ.சா.3. பெருமாள் த/பெ. பெரியசாமி :-** தனது சாட்சியத்தில், தன் மகளுக்கு 2004ல் தெய்யாரில் திருமணம் நடந்ததாகவும், திருமணத்தின் போது 7 பவுன் நகையும், மாப்பிளைக்கு 1 பவுனும், டி.வி.எஸ் 50 வண்டி ஒன்றும், 117 சீர்வரிசை சாமான்கள் கொடுத்ததாகவும், திருமணம் முடிந்த உடன் எதிரி உடன் கூட்டுக்குடும்பமாக இருந்தாள் எனவும், தன் மகளுக்கு ஆண் குழந்தை பிறந்தது எனவும், தன் பேரகுழந்தை 7 மாதமாக இருக்கும் போது தன் மகளை பணம் கேட்டு துரத்திவிட்டதாகவும், தான் மகளிர் காவல் நிலையத்தில் புகார் செய்ததாகவும், பிறகு 2 மாதங்கள் தன் மகள் எதிரி உடன் இருந்தார் எனவும், பெரிய வண்டி, 10 பவுன் நகை வாங்கி வந்தாள் தான் எதிரிகள் 1 முதல் 5 சொல்லி*

*தன் மகளை அடித்து விட்டார்கள் எனவும், தான் தன் மகளுக்கு 5 ஆயிரம் கொடுத்து திருப்பி அனுப்பியதாகவும், 2 மாதம் கழித்து தன் மகளுக்கு சாப்பாடு போடாமல் அடித்து பணம் கேட்டு கொடுமை செய்ததாகவும், தன் மகள் தன் வீட்டில் இருந்ததாகவும், தான் சென்னையில் இருந்தபோது ஏழுமலை என்பவர் தன் மருமகன் 2ம் திருமணம் செய்து கொண்டதாக தகவல் சொன்னார் எனவும், தான் மகளிர் காவல் நிலையத்தில் புகார் செய்ததாகவும், சாட்சியம் அளித்துள்ளார்.*

***7. அ.சா.4. ஆறுமுகம் த/பெ. சுப்பையா :-*** *தனது சாட்சியத்தில், ஜெயந்திக்கு 2004ல் தெய்யாரில் திருமணம் நடந்ததாகவும், திருமணத்திற்கு தான் சென்றிருந்ததாகவும், திருமணத்திற்கும் 7 பவுன் நகை, வண்டி, சாமான்கள் கொடுத்தாகவும், திருமணமாகி கூட்டுகுடும்பமாக ஜெயந்தி இருந்ததாகவும், அடிக்கடி ஜெயந்தி சண்டை போட்டு வரும்போது தாங்கள் சமாதானம் செய்து எதிரி வீட்டிற்கு அனுப்பி வைப்பதாகவும், ஜெயந்தியின் கணவர் 2ம் திருமணம் செய்ததாக கேள்விபட்டதாகவும், சாட்சியம் அளித்துள்ளார்.*

***8. அ.சா.5. ஏழுமலை த/பெ. கோபால் பிள்ளை :-*** *தனது சாட்சியத்தில், ஜெயந்தி குடும்பத்தில் வரதட்சணை கொடுமை என்று கேள்விபட்டதாகவும், 2006ல் தான் மாடு பார்க்க தெய்யாருக்கு சென்றதாகவும், பெருமாள் கோவிலில் சிவக்குமாருக்கு வேறு ஒரு பெண்ணுக்கும் திருமணம் நடந்ததாகவும், எதிரிகள் சொந்தகாரர்கள் அங்கு இருந்ததார்கள் எனவும், தான் சிவக்குமாரை கேட்டதற்கு அவர் உனக்கென்ன என்று கேட்டதாகவும், நான் சென்று ஜெயந்தியின் அப்பா, அம்மாவிடம் சொன்னதாகவும், சாட்சியம் அளித்துள்ளார்.*

***9. அ.சா.6. சகாதேவன் த/பெ. பட்டாபிராமன்:-*** *தனது சாட்சியத்தில், திருமணம் ஆகி 7, 8 வருடம் ஆகிறது எனவும், இருவருக்கும் திருமணம் நடந்து அடிக்கடி சண்டை சச்சரவாக இருந்தார்கள் எனவும், நகை கேட்டு ஜெயந்தியை அவர் கணவர் வீட்டில் துன்புறுத்தி உள்ளனர் எனவும், அடிக்கடி சண்டை போட்டு ஜெயந்தி தாய் வீட்டிற்கு வந்து விடும், 6, 7 மாதங்கள் நல்லபடியாக வாழ்ந்து அதன் பின்பு சண்டை ஏற்பட்டு வீட்டுக்கு வந்துவிட்டதாகவும், எதிரி சிவக்குமாருடன் ஜெயந்தி வாழவில்லை எனவும், அவர் திருமணத்தின் வாயிலாக 1 ஆண் குழந்தை பிறந்ததாகவும், தற்போது ஜெயந்தி அவர் தாய் வீட்டில் உள்ளதாகவும், தாங்கள் நிறைய முறை பஞ்சாயத்து செய்தும், அவர்கள் சேர்ந்து வாழவில்லை எனவும், அதன் பின்பு சிவக்குமார் வேறு ஒரு பெண்ணை திருமணம் செய்து கொண்டதாகவும், அவருடன் வாழ்ந்து வருவதாகவும், சாட்சியம் அளித்துள்ளார்.*

***10. அ.சா.7. தனசேகரன் த/பெ வீராசாமி கவுண்டர் :-*** *தனது சாட்சியத்தில், சிவக்குமாருக்கும் ஜெயந்திக்கும் சுமார் 10 வருடம் முன்பு தெய்யார் கிராமத்தில் திருமணம்*

நடந்ததாகவும், திருமணமாகி 1 ஆண் குழந்தை பிறக்கும் வரையில் நல்ல படியாக வாழ்ந்து வந்தார்கள் எனவும், வரதட்சணை கொடுமையை செய்து ஜெயந்தியை அவர் தாய் வீட்டிற்கு அடித்து அனுப்பிவிட்டார் எனவும், தாங்கள் பஞ்சாயத்து செய்து அவர் வீட்டில் விட்டதாகவும், 5, 6 மாதம் சேர்ந்து வாழ்ந்தார்கள் எனவும், அதன் பின்பு வரதட்சணை கொடுக்கவில்லை என்று அவர் தாய் வீட்டிற்கு அனுப்பி விட்டார்கள் எனவும், தற்போது ஜெயந்தி சேர்ந்து வாழவில்லை எனவும், சிவக்குமார் 2ம் திருமணம் செய்து அவருடன் சேர்ந்து வாழ்ந்து வருவதாகவும், சாட்சியம் அளித்துள்ளார்.

11. **அ.சா.8. சரஸ்வதி, (புலன் விசாரணை அதிகாரி) :-** தனது சாட்சியத்தில், தான் தற்போது திருத்தணி, அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக உள்ளதாகவும், 13.02.2007ம் தேதி வந்தவாசி மகளிர் காவல் நிலைய ஆய்வாளராக இருந்த போது கொண்டையாங்குப்பம் சேர்ந்த ஜெயந்தி க/பெ சிவக்குமார், நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று குற்ற எண்.1/2007 பிரிவு 498(எ), 494, 506(2)-ன் கீழ் வழக்கு பதிவு செய்ததாகவும், பின்னர் சம்பவ இடம் சென்று சாட்சிகளை ஜெயந்தி, பெருமாள், வீரம்மாள் சகாதேவன் இவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், அன்றே எதிரிகள் தனபாக்கியம், பெருமாள், முனியம்மாள் கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்ததாகவும், சாட்சிகள் 14.02.2007ம் தேதி ஆறுமுகம், ஏழுமலை, தனசேகர் இவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், எதிரிகள் ராஜகோபால், சிவக்குமார், அஞ்சலா இவர்கள் முன் ஜாமின் பெற்றதால் கைது செய்யவில்லை எனவும், பிறகு 2007ம் தேதி விசாரணை முடித்து சட்டப்பிரிவுகள் 498(எ), 506(1), 494 மற்றும் வரதட்சணை தடுப்பு சட்டம் 4 பிரிவின் கீழும் உ/இ இதச 109ன் கீழ் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யததாகவும், சாட்சியம் அளித்துள்ளார். முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

12. இத்துடன் அரசு தரப்பு சாட்சிகள் முடிக்கப்பட்டு சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்து எதிரிகளுக்கு பாதகமாக அமைந்துள்ள அம்சங்களை கு.வி.மு.ச. பிரிவு 313(1)(ஆ) பிரிவின் கீழ் எதிரிகளிடம் எடுத்துக்கூறி வினவியபோது எதிரிகள் பொய் சாட்சியம் என்று மறுத்துரைத்தார்கள். மேலும், எதிரிகள் தரப்பு சாட்சியத்திற்கு போதிய கால அவகாசம் வழங்கப்பட்டு அதன்பின்பு தங்களது தரப்பில் சாட்சி இல்லை என்று கூறினார்கள்.

**இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டியது யாதெனில், எதிரிகள் மீதான குற்றசாட்டுக்களானது அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதே ஆகும்.**

*13. கற்றறிந்த அரசு தரப்பு வழக்குரைஞர் தனது வாதத்தில் எதிரிகளின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிருப்பிக்கப்பட்டுள்ளது என்றும், எதிரிகளுக்கு அதிகப்பட்ச தண்டனை வழங்கவேண்டுமென்றும் வாதிட்டார்.*

*14. மாறாக கற்றறிந்த எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில், இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 தனது சாட்சியத்தில் அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட அ.த.சா.ஆ.1 புகாரானது தான் கொடுத்தது இல்லை என்று சாட்சியம் அளித்துள்ளதாகவும், அரசு தரப்பில் எதிரியின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் வண்ணம் அரசு தரப்பில் முன்னிறுத்தப்பட்ட சாட்சிகள் யாரும் சாட்சியம் அளிக்கவில்லை என்றும், மேலும், அரசு தரப்பு சாட்சிகள் ஒருவருக்கொருவர் முன்னுக்கு பின் முறணாக சாட்சியம் அளித்துள்ளதாவும், எனவே எதிரிகளின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளானது அரசு தரப்பால் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்றும், எனவே சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி எதிரிகளை விடுதலை செய்யவேண்டும் என வாதிட்டார். மேலும் எதிரிகளின் தரப்பில் எழுத்துப்பூர்வமான வாதம் தாக்கல் செய்யப்பட்டது.*

***இருதரப்பு வாதங்களும் கவனத்துடன் பரிசீலனை செய்யப்பட்டது. வழக்கின் ஆவணங்கள் கூர்ந்து ஆய்வு செய்யப்பட்டது.***

*15. இவ்வழக்கின் எதிரிகளின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களான மனைசார் வன்கொடுமை செய்தது, குற்றமுறு மிரட்டல் விடுத்தது, அ.சா.1 உயிருடன் இருக்கும்போது 1ம் எதிரி மீண்டும் 2ம் திருமணம் செய்துக்கொண்டது மற்றும் வரதட்சணை கோரியது உள்ளிட்ட குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதை பரிசீலிக்கையில், இவ்வழக்கினுடைய முதல் தகவல் அறிக்கையானது அ.சா.1-ஆல் 13.02.2007 அன்று அளிக்கப்பட்ட புகாரின் அடிப்படையில், பதிவு செய்யப்பட்டுள்ளதாக அரசு தரப்பு வழக்கு அமைந்துள்ளது. அ.த.சா.ஆ.1/புகாரினை பரிசீலனை செய்யும்போது அ.சா.1 தனது கணவர்/1ம் எதிரி மற்றும் அவரது குடும்பத்தாரான 2 முதல் 5 எதிரிகளின் மீதும் மற்றும் 1ம் எதிரி 2வதாக திருமணம் செய்ததாக கூறப்படும் 6ம் எதிரியின் மீதும் புகார் அளித்துள்ளார். மேற்கண்ட அ.த.சா.ஆ.1/புகாரினை கூர்ந்து பரிசீலனை செய்யும்போது அ.சா.1க்கும், 1ம் எதிரிக்கும் பெரியோர்கள் முன்னிலையில் 03.09.2004 அன்று திருமணம் நடந்ததாகவும், திருமணத்திற்கு பின்பு எதிரிகளுடன் கூட்டு குடும்பமாக வாழ்ந்து வந்ததாகவும், 1ம் எதிரி, 2 முதல் 5 வரையிலான எதிரிகளின் பேச்சை கேட்டுக்கொண்டு அ.சா.1ஐ தனது தாய் வீட்டிலிருந்து 10 பவுன் நகையும், பெரிய வண்டியும் வாங்கி வந்தால் தான் தன் வீட்டில் வாழ முடியும் என்றும், இல்லை என்றால் தன்னுடன் வாழ முடியாது என அடித்து*

*உணவு அளிக்காமல் கொடுமை படுத்தியதாகவும், அதன் அடிப்படையில் அ.சா.1 தன் தாய் வீட்டிலிருந்து ரூ.5,000/-ம் வாங்கி வந்து 1ம் எதிரியிடம் கொடுத்ததாகவும், இருப்பினும் எதிரிகள் அனைவரும் அ.சா.1ஐ கொடுமைபடுத்தியதாகவும், அது சம்பந்தமாக 12.04.2006 அன்று வந்தவாசி மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்ததாகவும், ஆனால் காவல் நிலையத்தில் சமாதானம் செய்து அனுப்பிவிட்டதாகவும், புகார் அளிப்பதற்கு 2 மாதத்திற்கு முன்பு எதிரிகள் அனைவரும் அ.சா.1ஐ தாக்கி, வரதட்சணை கொண்டுவராததால், தங்களுடைய வீட்டில் இடம் இல்லை என்று தன்னை அடித்ததாகவும், எதிரிகள் அடித்ததை வெளியில் சொன்னால் அ.சா.1யையும் அவரது குடும்பத்தையும் கூண்டோடு ஒழித்துவிடுவதாக மிரட்டி வீட்டை விட்டு துரத்திவிட்டதாகவும், மேலும் 1ம் எதிரிக்கு 6ம் எதிரியை பிற எதிரிகள் 2ம் திருமணம் செய்து வைத்துவிட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.*

*16. மேற்கண்ட சூழ்நிலையில், அ.சா.1னுடைய குறுக்கு விசாரணையை பரிசீலிக்கையில், அ.சா.1 அளித்த புகார் குறித்து அ.சா.1 தனது குறுக்கு விசாரணையில்,*

> ***" புகாரை ஓரத்தியார் என்பவர் எழுதினார். அதை கொண்டு போய் வந்தவாசி மகளிர் காவல் நிலையத்தில் கொடுத்தேன். புகாரை மை பேனாவால் எழுதினார். அதை தான் நான் கடைசியாக கொடுத்த புகார் தான். அந்த புகார் பெயரில் தான் போலிசார் நடவடிக்கை எடுத்தார்கள். அ.சா.ஆ.1 புகார் ஓரத்தியால் எழுதிக்கொடுத்து நான் கொடுத்த புகார் அல்ல. அ.சா.ஆ.1 புகார் எவ்வாறு எழுதப்பட்டது என்று எனக்கு தெரியாது."*** *என சாட்சியம் அளித்துள்ளார்.*

*17. மேற்கண்ட சூழ்நிலையில், அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட அ.த.சா.ஆ.1 ஆனது தட்டச்சு செய்யப்பட்டுள்ளது. மாறாக அ.சா.1 தனது குறுக்கு விசாரணையில், தான் அளித்த புகாரானது ஓத்தியார் என்பவர் மை பேனாவால் எழுதிக்கொடுத்தது என்றும், அ.த.சா.ஆ.1 ஆனது தான் அளித்தது அல்ல என்றும், சாட்சியம் அளித்துள்ளதை கண்ணுறும் போது அ.த.சா.ஆ.1 ஆனது அ.சா1. அளித்த புகார் தானா என்ற சந்தேகத்தை எழுப்புகிறது.*

*18. மேற்கண்ட அ.சா.1னுடைய சாட்சியத்தினை மேலும் ஒத்தேற்கும் விதமாக அ.சா.1னுடைய தந்தை அ.சா.3 தனது குறுக்கு விசாரணையில்,*

> ***"புகாரை ஓரத்தியார் என்பவர் எழுதினார். அந்த புகாரை தான் காவல் நிலையத்தில் கொண்டுபோய் கொடுத்தோம். அதில்***

***எந்தவிதமான கருத்து மாறும் கிடையாது. புகாரை நீல மை பேனாவில் வந்தவாசி மகளிர் காவல் நிலையத்தில் வைத்து எழுதிக்கொடுத்தார். நாங்கள் தட்டச்சு செய்து எந்த புகாரும் கொடுக்கவில்லை."*** *என சாட்சியம் அளித்துள்ளார்.*

*19. மேற்படி அ.சா.3னுடைய சாட்சியத்தையும், அ.சா.1னுடைய சாட்சியத்தையும் கூர்ந்து பரிசீலிக்கும் போது அ.த.சா.ஆ.1 ஆனது அ.சா.1-ஆல் அளிக்கப்பட்டது இல்லை என்பது உறுதியாகிறது.*

*20. பொதுவாக ஒரு குற்றவியல் வழக்கினுடைய அடிப்படை ஆதாரமானது அவ்வழக்கினுடைய புகாரே ஆகும். ஆனால், இவ்வழக்கினை பொறுத்தளவில் அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள புகார்/அ.த.சா.ஆ.1 ஆனது அ.சா.1 மற்றும் அ.சா.3 ஆகியோரின் சாட்சியங்களின்படி அ.சா.1 அளித்த புகார் இல்லை என தெரிய வந்த நிலையில், அ.சா.1 அளித்த புகாருக்கு மாற்றாக அரசு தரப்பில் தட்டச்சு செய்யப்பட்ட புகாரானது தாக்கல் செய்யப்பட்டது எவ்வாறு என்ற சந்தேகம் எழுப்புகிறது. ஆனால் மேற்கண்ட முரண்பாடுகள் குறித்து அரசு தரப்பில் போதிய விளக்கம் தரப்படாத நிலையில் அ.த.சா.ஆ.1ன் உடைய நம்பகத்தன்மையை இந்நீதிமன்றம் ஏற்க மறுக்கிறது.*

*21. மேற்கண்ட சூழ்நிலையில், அ.த.சா.ஆ.1 ஆனது அ.சா.1 அளித்த புகார் இல்லை என அ.சா.1 மற்றும் அ.சா.3 ஆகியோர்களின் சாட்சியங்களிலிருந்து தெரியவருகின்ற நிலையில், அரசு தரப்பில் முன்னிறுத்தப்பட்ட சாட்சிகளுடைய சாட்சியங்களை கொண்டு எதிரிகளின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டான மனைசார் வன்கொடுமை செய்தது, வரத்தட்சணை கோரியது மற்றும் கொலை மிரட்டல் விடுத்தது ஆகிய குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதனை கூர்ந்து பரிசீலிக்கும் போது அ.சா.1 தனது முதல் விசாரணையில், திருமணத்திற்கு பின்பு அ.சா.1க்கு செய்யப்பட்ட சீர்வரிசையானது போதாது என்று 2 மற்றும் 3 எதிரிகள் 1ம் எதிரியிடம் சொல்லி 1ம் எதிரி தன்னை குடித்துவிட்டு வந்து அடிப்பார் என்றும், பின்னர் ரூ.50,000/-ம் கேட்டு தன்னை துரத்திவிட்டதாகவும், தன் அம்மாவிடமிருந்து ரூ.5,000/-ம் வாங்கி வந்து கொடுத்ததாகவும், 1ம் எதிரி தன்னை தன் தாய் வீட்டில் விட்டுவிட்டதாகவும், ரூ.50,000/-ம் பணமும், இரு சக்கர வாகனமும் கேட்டு தன்னை அடித்து துன்புறுத்தியதாக சாட்சியம் அளித்துள்ளார்.*

*22. மேற்படி அ.சா.1னுடைய முதல் விசாரணையை கூர்ந்து பரிசீலிக்கும் போது அ.சா.1க்கு அளிக்கப்பட்ட சீர்வரிசை போதாது என்று 2 மற்றும் 3 எதிரிகள் 1ம் எதிரியிடம் சொல்லி 1ம் எதிரி தன்னை அடித்து துன்புறுத்தியதாகவும், இரு சக்கர வாகனமும், ரூ.50,000/ம்*

*பணமும் கேட்டு துன்புறுத்தியதாகவும், தன்னை 1ம் எதிரி தாய் விட்டில் விட்டுவிட்டதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். ஆனால், அ.சா.1 தனது சாட்சியத்தில், 2 மற்றும் 3 எதிரிகள் 1ம் எதிரியிடம் சொல்லி 1ம் எதிரி அ.சா.1ஐ குடித்துவிட்டு அடித்ததாகவுடம், ரூ.50,000ம் இருசக்கர வாகனமும் கேட்டதாகவும், அ.சா.1 தனது தாய்வீட்டில் இருந்து ரூ.5000ம் வாங்கி வந்து கொடுத்ததாக சாட்சியம் அளித்துள்ளாரே தவிர, 2ம் எதிரியோ அல்லது 3ம் எதிரியோ தன்னை மனைசார் வன்கொடுகை புரிந்ததாகவோ அல்லது வரதட்சணை கேட்டதாகவோ, கொலைமிரட்டல் விடுத்ததாகவோ எந்தவொரு சாட்சியமும் அளிக்கவில்லை. மேலும், 4 மற்றும் 5 எதிரிகள் தன்னை மனைசார் வன்கொடுமை புரிந்ததாகவோ அல்லது வரதட்சணை கோரியதாகவோ, கொலைமிரட்டல் விடுத்ததாகவோ எந்தவொரு பொருண்மைகளும் அ.சா.1ன் உடைய சாட்சியத்தில் காணப்படாதது 2 முதல் 5 வரையிலான எதிரிகளின் மீது அரசு தரப்பால் சுமத்தப்பட்ட மேற்கண்ட குற்றச்சாட்டுக்களான மனைசார் வன்கொடுமை செய்தது, வரதட்சணை கோரியது மற்றும் கொலைமிரட்டல் விடுத்தது ஆகிய குற்றச்சாட்டுகளுக்கு அ.சா.1ன் உடைய சாட்சியமானது போதுமானதாக இல்லையென்று இந்நீதிமன்றம் கருதுகிறது.*

*23. இந்நிலையில், இவ்வழக்கினுடைய முக்கிய சாட்சிகளான அ.சா.1ன் பெற்றோர் அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோரின் சாட்சியங்கள் அ.சா.1ன் உடைய சாட்சியத்தினை உறுதியூட்டுகிறதா என்பதனை கண்ணுறும்போது அ.சா.2 தன்னுடைய முதல் விசாரணையில் ரூ.50,000ம் கேட்டதாகவும், தான் ரூ.5000ம் கொடுத்ததாகவும், மீண்டும் பணம் கேட்டு அடித்ததாகவும், எல்லா எதிரிகளும் கும்பல் சேர்ந்து அடித்து துரத்திவிட்டதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2ன் உடைய முதல் விசாரணையை பரிசீலிக்கும் போது அ.சா.1றிடம் எதிரிகளில் யார் வரதட்சணை கோரியது என்பது குறித்து குறிப்பாக சாட்சியம் அளிக்கவில்லை. மேலும் எதிரிகள் கொலை மிரட்டல் விடுத்தது குறித்தும் அ.சா.2ன் உடைய சாட்சயத்தில் எந்தவொரு பொருண்மைகளும் காணப்படவில்லை. மேலும், அனைத்து எதிரிகளும் கும்பல் சேர்ந்து அடித்து துரத்திவிட்டதாக அ.சா.2 சாட்சியம் அளித்திருப்பினும், அவருடைய சாட்சியத்தில் அ.சா.1 எதிரிகள் யார் யார் அடித்தார்கள் என்பது குறித்தும், எப்போது வீட்டை விட்டு வெளியேற்றினார்கள் என்பது குறித்தும், எந்த காரணங்களுக்காக அ.சா.1 வீட்டை விட்டு எதிரிகள் வெளியேற்றினார்கள் என்பது குறித்து அ.சா.2ன் சாட்சியத்தில் குறிப்பிட்டு எந்த பொருண்மைகளும் காணப்படாத நிலையில், இவ்வழக்கில் அளிக்கப்பட்ட புகார் குறித்து அ.சா.2 தன்னுடைய குறுக்கு விசாரணையில் பின்வருமாறு சாட்சியம் அளித்துள்ளார்.*

***" பஞ்சாயத்து படி என்னுடைய மகளையும், வைத்து வாழாமல் ஒப்புக்கொண்டபடி 2 ஏக்கர் நிலம் கொடுக்காததால் புகார் கொடுத்தோம்"** என குறிப்பிட்டுள்ளார்.*

*24. மேற்படி அ.சா.2ன் உடைய குறுக்கு விசாரணையை பரிசிலிக்கும் போது பஞ்சாயத்தில் பேசியப்படி எதிரிகள் அ.சா.1யை வைத்து வாழாமல் இருக்க 2 ஏக்கர் நிலம் கொடுக்காததால் புகார் அளித்ததாக உள்ள சாட்சியமானது அரசு தரப்பு வழக்கினை பாதிப்பதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது. மேற்கண்ட அ.சா.2 உடைய சாட்சியத்தில் காணப்படுகின்ற முரண்பாடுகளானது அ.சா.1ன் உடைய சாட்சியத்தினை உறுதிப்படுத்தும் விதமாக அ.சா.2ன் சாட்சியம் அமையவில்லை என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.*

*25. மேற்கண்ட சூழ்நிலையில், அ.சா.1ன் தகப்பனாரான அ.சா.3 தனது சாட்சியத்தில் அ.சா.1 எதிரியை திருமணம் செய்த பின்பு அ.சா.1 பணம் கேட்டு துரத்திவிட்டதாகவும், தான் மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்ததாகவும், பின்பு இரண்டு மாதங்கள் அ.சா.1 1ம் எதிரியுடன் வாழ்ந்ததாகவும், பெரிய வண்டி, 10 பவுன் நகைகள் வாங்கிவரவேண்டும் என்று 1 முதல் 5 எதிகள் அ.சா.1 அடித்து அனுப்பிவிட்டதாகவும், தான் அ.சா.1ற்கு ரூ.5000ம் கொடுத்து அனுப்பியதாகவும், இரண்டு மாதங்கள் கழித்து அ.சா.1ற்கு உணவு அளிக்காமல், பணம் கேட்டு கொடுமை படுத்தியதாக சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி அ.சா.3ன் உடைய சாட்சியத்தினை கூர்ந்து பரிசிலிக்கையில், அ.சா.3ன் சாட்சியத்தையும் எதிரிகள் யார் அ.சா.1னிடம் வரதட்சணை கோரினார்கள் என்பதும், எதிரிகளில் யார் அ.சா.1யை மனைசார் வன்கொடுமை செய்தது என்பது குறித்தும், குறிப்பிட்டு எந்த ஒரு பொருண்மைகளும் அ.சா.3னுடைய சாட்சியத்தில் காணப்படவில்லை. இந்நிலையில் அ.சா.1 தனது முதல் விசாரணையில் 1ம் எதிரியிடம் 2 மற்றும் 3 எதிரிகள் சொல்லி 1ம் எதிரி தன்னை குடித்துவிட்டு அடித்ததாகவும், ரூ.50,000ம் பணம் மற்றும் இருசக்கர வாகனம் கேட்டு துரத்திவிட்டதாக சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2ம் தனது முதல் விசாரணையில் எதிரிகள் அ.சா.1றிடம் ரூ.50,000ம் கோரியதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் அ.சா.1 தனது முதல் விசாரணையில் அ.சா.2 முதல் அ.சா.5 வரையான எதிரிகள் தன்னிடம் வரதட்சணை கோரியதாகவோ அல்லது மனைசார் வன்கொடுமை புரிந்ததாகவோ எந்தவொரு சாட்சியம் அளிக்காத நிலையில் அ.சா.3 தனது சாட்சியத்தில் 1 முதல் 5 எதிரிகள் அ.சா.1றிடம் 10 சவரன் நகைகள் கேட்டதாகவும், இருச்சக்கர வாகனம் கேட்டதாகவும், அளித்துள்ள சாட்சியமானது அ.சா.1ன் சாட்சியத்தினை முரண்படுத்துவதாக அமைந்துள்ளது. மேலும், அரசு தரப்பில் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டான கொலைமிரட்டல் விடுத்தது குறித்தும், அ.சா.3ன் உடைய சாட்சியத்தில் எந்த பொருண்மைகளும் காணப்படவில்லை. மேற்கண்ட சூழ்நிலையில், அ.சா.3ன் சாட்சியத்தில் காணப்படும் முரண்பாடுகளானது அ.சா.1ன் உடைய சாட்சியத்தினை ஒத்தேற்க்கும் விதமாக அமையவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.*

*26. மேற்கண்ட சூழ்நிலையில், இவ்வழக்கினுடைய செவி வழி சாட்சியான அ.சா.4 தனது சாட்சியத்தில் அ.சா.1 மற்றும் 1ம் எதிரிக்கும் இடையே நடைபெற்ற திருமணம் குறித்தும், அ.சா.1, 1ம் எதிரியுடன் தகராறு செய்து தனது தாய் வீட்டிற்கு வந்தபோது தாங்கள் சமாதானம் செய்தது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் தனது குறுக்கு விசாரணையில் அ.சா.4 அ.சா.1ன் வீட்டில் நடைபெற்ற சம்பவங்களானது அ.சா.3 சொல்லிதான் தெரியும் என்றும், நேரடியாக தனக்கு தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அ.சா.4ன் உடைய முதல் விசாரணையை கண்ணுற்றும் போது அ.சா.1 அடிக்கடி சண்டைப்போட்டு அவரது தாய் வீட்டிற்கு வந்துவிடுவார் என சாட்சியம் அளித்துள்ளாரே தவிர எதிரிகள் அ.சா.1யை மனைசார் வன்கொடுமை செய்ததாகவோ, கொலை மிரட்டல் விடுத்ததாகவோ, வரதட்சணை கோரியதாகவோ அ.சா,4ன் சாட்சியத்திற்கு எந்ததொரு பொருண்மைகளோ காணப்படவில்லை. அதனை உறுதிப்படுத்தும் விரமாக அ.சா.4 தனது குறுக்கு விசாரணையில் கணவன் மனைவிக்குள் என்ன பிரச்சனை என்று தனக்கு தெரியாது என சாட்சியம் அளித்துள்ளார். எனவே அ.சா.4ற்கு அ.சா.1ற்கும், 1ம் எதிரிக்கும் இடையே நடைபெற்ற சம்பவமானது அ.சா.3 சொல்லிதான் தெரியும் எனவும், நேரடியாக தனக்கு தெரியாது என அளித்துள்ள சாட்சியத்திலிருந்து, அ.சா.4 செவி வழி சாட்சிதான் என்றும், அ.சா.4 கண்ணுற்ற சாட்சி இல்லை என்பது தெரியவருகிறது.*

*27. இவ்வழக்கின் மற்றொரு செவி வழி சாட்சியான அ.சா.6 தனது முதல் விசாரணையில் அ.சா.1 மற்றும் 1ம் எதிரிக்கிடையே திருமணம் நடைபெற்றது குறித்து அ.சா.1யை எதிரிகள் துன்புறுத்தியது குறித்தும், பின்பு 1ம் எதிரியுடன் பிரிந்து அ.சா.1 தனது தாய் வீட்டிற்கு வந்ததது குறித்தும் தாங்கள் பலமுறை பஞ்சாய்த்து செய்தும், அ.சா.1, 1ம் எதிரியுடன் சேர்ந்து வாழவில்லை என சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் அ.சா.6 தனது குறுக்கு விசாரணையில் அ.சா.1க்கும், 1ம் எதிரிக்கும் அவர் வீட்டில் நடைபெற்ற தகராறு நேரடியாக தெரியாது என்றும், அ.சா.1ன் தகப்பனார் அ.சா.3 சொல்லிதான் தான் சாட்சியம் அளிக்க வந்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி அ.சா.6ன் சாட்சியத்தினை கூர்ந்து பரிசீலிக்கும் போது அ.சா.6 செவி வழி சாட்சி தான் என்பது தெரியவருகிறது.*

*28. இவ்வழக்கில் செவி வழி சாட்சியான அ.சா.7 தனது சாட்சியத்தில் அ.சா.1க்கும், 1ம் எதிரிக்கு நடைபெற்ற திருமணம் குறித்தும், அ.சா.1யை எதிரிகள் வரதட்சணை கொடுமை செய்து வீட்டை விட்டு அனுப்பிவிட்டதாகவும், தாங்கள் பஞ்சாயத்து செய்ததாகவும், அதன்*

பின்பு 1ம் எதிரி, அ.சா.1ம் 5, 6 மாதங்கள் ஒன்றாக வாழ்ந்ததாகவும், மீண்டும் வரதட்சணை கேட்டு திருப்பி அனுப்பிவிட்டதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் அ.சா.7 தனது குறுக்கு விசாரணையில் அ.சா.1 தனது கிராமத்தை சார்ந்தவர் என்பதால் சாட்சியம் அளிக்கவந்ததாகவும், அ.சா.1ன் குடும்பத்தில் நடந்த சண்டை தனக்கு தெரியும் என்றும், அதனை தான் நேரில் பார்க்வில்லையென்றும் சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி அ.சா.7ன் உடைய சாட்சியத்தினை கூர்ந்து பரிசிலிக்கையில் அ.சா.7ம் செவி வழி சாட்சியம் என்பது தெரியவருகிறது.

29. மேற்கண்ட சூழ்நிலையில், இவ்வழக்கினுடைய செவி வழி சாட்சிகளான அ.சா.6 தனது முதல் விசாரணையில் அ.சா.1 - 6, 7 மாதங்கள் நல்லபடியாக வாழந்துவந்ததாகவும், அதன் பின்பு 1ம் எதிரி, அ.சா.1றுடன் வாழவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் மேற்படி அ.சா.6ன் சாட்சியத்திற்கு முரண்பட்டு இவ்வழக்கின் மற்றொரு செவி வழி சாட்சியான அ.சா.7 தனது முதல் விசாரணையில் திருமணம் ஆகி ஒரு குழந்தை பிறக்கும் வரையில் நல்லபடியாக வாழ்ந்து வந்ததாகவும், அதன் பின்பு எதிரிகள் வரதட்சணை கொடுமை செய்து தனது தாய்வீட்டிற்கு அனுப்பி வைத்ததாக சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி செவி வழி சாட்சிகளான அ.சா.6 மற்றும் அ.சா.7ன் உடைய சாட்சிகளின் சாட்சியங்களில் காணப்படுகின்ற முரண்பாடுகளானது அரசு தரப்பு வழக்கினை உறுதியூட்டும் வகையில் அமையவில்லையென்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

30. எனவே இவ்வழக்கின் செவி வழி சாட்சிகளான அ.சா.4, அ.சா.6 மற்றும் அ.சா.7 ஆகியோரின் சாட்சியங்கள் எதிரிகளின் மீது சுமத்தப்பட்ட மனைசார் வன்கொடுமை செய்தது, கொலை மிரட்டல் விடுத்தது மற்றும் வரதட்சணை கோரியது ஆகிய குற்றச்சாட்டுக்களை நிரூபிக்க போதுமானதாக இல்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

31. மேற்கண்ட சூழ்நிலையில், அ.சா.1 முதல் அ.சா.4 மற்றும் அ.சா.6, அ.சா.7 வரையிலான சாட்சிகளின் சாட்சியங்களை கூர்ந்து பரிசிலினை செய்கையில், 2 முதல் 6 வரையிலான எதிரிகளின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களான மனைசார் வன்கொடுமை செய்தது, வரதட்சணை கோரியது, கொலை மிரட்டல் விடுத்தது ஆகிய குற்றச்சாட்டுக்களானது அரசு தரப்பில் சந்தேகதற்க்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. அ.சா.1 தனது சாட்சியத்தில் 1ம் எதிரி, 2 மற்றும் 3 எதிரிகள் சொல்லி தன்னை குடித்துவிட்டு அடித்து உணவு அளிக்காமல், துன்புறுத்தி ரூ.50,000ம் மற்றும் இருசக்கர வாகனம் கோரியதாக சாட்சியம் அளித்திருப்பினும், அவரது சாட்சியத்தினை உறுதிப்படுத்தும் விதமாக அரசு தரப்பில் முன்னிறுத்தப்பட்ட பிற சாட்சிகளின் சாட்சியங்கள் அமையாத

*நிலையில், அ.ச.1ன் உடைய சாட்சியம் மட்டும், 1ம் எதிரியின் மீது சுமத்தப்பட்ட மனைசார் வன்கொடுமை செய்தது, வரதட்சணை கோரியது, கொலை மிரட்டல் விடுத்தது உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களை நிரூபிக்க போதுமானதாக இல்லையென இந்நீதிமன்றம் கருதுகிறது.*

*32. மேற்கண்ட சூழ்நிலையில், அ.சா.1னுடைய சாட்சியத்தின் அடிப்படையில், 1 மற்றும் 6 எதிரியின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டான அ.சா.1 உயிருடன் இருக்கும்போதே 6ம் எதிரியை 1ம் எதிரி இரண்டாம் திருமணம் செய்துக்கொண்டதாக சாட்டப்பட்ட குற்றச்சாட்டினை நிரூபிக்க அ.சா.1னுடைய சாட்சியம் போதுமானதா என்பதனை பரிசீலிக்கையில், அ.சா.1 தனது சாட்சியத்தில் 6ம் எதிரியை 1ம் எதிரி 2வதாக திருமணம் செய்துக்கொண்டதாக சாட்சியம் அளித்துள்ளரே தவிர அ.சா.1னுடைய சாட்சியத்தில் 1ம் எதிரிக்கும், 6ம் எதிரிக்கும் எங்கு எப்போது திருமணம் நடைபெற்றது என்ற எந்த ஒரு பொருண்மைகளும் அ.சா.1 சாட்சியத்தில் காணப்படவில்லை. மேலும், அ.சா.1னுடைய சாட்சியத்தை உறுதிப்படுத்தும் விதமாகவும், அரசு தரப்பில் 1ம் எதிரி, 6ம் எதிரியை திருமணம் செய்துக்கொண்டதற்கான எந்த ஒரு சான்றாவணங்களையும் இந்நீதிமனற்த்தில் தாக்கல் செய்யவில்லை.*

*33. மேற்கண்ட சூழ்நிலையில், அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோர் தங்களது சாட்சியத்தில், இவ்வழக்கின் அ.சா.5 ஏழுமலை என்பவர் 1ம் எதிரி 2ம் திருமணம் செய்துக்கொண்டதாக தகவல் சொன்னதாக சாட்சியம் அளித்துள்ளனர். மேற்படி அ.சா.5 ஏழுமலை என்பவரது முதல் விசாரணையை கண்ணோக்கும் போது தனது முதல் விசாரணையில், தான் 2006ல் தெய்யாருக்கு மாடு பிடிக்க சென்றதாகவும், அங்கிருந்த பெருமாள் கோவிலில் 1ம் எதிரிக்கும் வேறு ஒரு பெண்ணுக்கும் திருமணம் நடந்ததாகவும், எதிரிகளின் உறவினர்கள் அங்கு இருந்ததாகவும், தான் 1ம் எதிரியை கேட்டபோது உனக்கு என்ன என்று குறிப்பிட்டதாகவும், எனவே அ.சா.2 மற்றும் அ.சா.3விடம் இது சம்மந்தமாக தகவல் தெரிவித்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.*

*34. மேற்கண்ட சூழ்நிலையில், அ.சா.5 தனது முதல் விசாரணையில் 1ம் எதிரிக்கு தெய்யார் கிராமத்தில் உள்ள பெருமாள் கோவிலில் திருமணம் நடைபெற்றதை தான் பார்த்ததாக குறிப்பிட்டுள்ள நிலையில், தனது குறுக்கு விசாரணையில்,*

> ***"2ம் திருமணம் எந்த வருடம், மாதம், தேதி ஞாபகம் இல்லை."***
> *என்றும்,* ***" நான் திருமணம் நடந்ததை நேரடியாக பார்க்கவில்லை."***
> *என்று சாட்சியம் அளித்துள்ளார்.*

*35. மேற்கண்ட அ.சா.5னுடைய முதல் மற்றும் குறுக்கு விசாரணை ஆகியவற்றை கண்ணோக்கும் போது 1ம் எதிரிக்கு 2வது திருமணம் நடைபெற்றதை தான் பார்த்ததாக தனது முதல் விசாரணையில் சாட்சியம் அளித்த நிலையில், தனது குறுக்கு விசாரணையில் தனக்கு 1ம் எதிரிக்கு 2ம் திருமணம் நடைபெற்ற தேதி, மாதம் ஆகியவை நினைவில்லை என சாட்சியம் அளித்துள்ளதும், திருமணத்தை தான் நேரடியாக பார்க்கவில்லை என சாட்சியம் அளித்துள்ளதும், அ.சா.5னுடைய சாட்சியத்தில் உள்ள முரண்பாடுகளை காட்டுவதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது.*

*மேலும், அ.சா.5 தனது குறுக்கு விசாரணையில்,*

**" காலை 8, 9 மணிக்கு கொண்டையாங்குப்பம் கிராமத்திற்கு சென்றேன். அன்றே ஜெயந்தி அப்பாவிடம் போய் சிவக்குமாரை பார்த்த விஷயத்தை போய் சொன்னேன்."** *என சாட்சியம் அளித்துள்ளார்.*

*36. மேற்படி அ.சா.5னுடைய குறுக்கு விசாரணையை பரிசீலிக்கையில், திருமணம் நடைபெற்ற அன்றே தான் அ.சா.3னிடம் தகவல் தெரிவித்ததாக அ.சா.5 சாட்சியம் அளித்துள்ளார்.*

*இந்நிலையில், அ.சா.3 தனது முதல் விசாரணையில்,*

**"தான் சென்னையில் இருந்தபோது ஏழுமலை என்பவர் 1ம் எதிரி 2ம் திருமணம் செய்துக்கொண்டதாக சொன்னார்."** *என சாட்சியம் அளித்துள்ளார்.*

*37. மேற்படி அ.சா.5 ஆனவர் திருமணம் நடைபெற்றவுடன் தான் காலை 8, 9 மணிக்கு கொண்டையாங்குப்பம் கிராமத்திற்கு சென்று அ.சா.3டம் தகவல் சொன்னதாக சாட்சியம் அளித்துள்ள நிலையில், அ.சா.5 சென்னையில் இருக்கும்போது அ.சா.3 தனக்கு அ.சா.5 தகவல் சொன்னதாக அளித்துள்ள சாட்சியமானது அ.சா.5னுடைய சாட்சியத்தில் உள்ள முரண்பாடுகளையே காட்டுகிறது.*

*38. மேற்கண்ட சூழ்நிலையில், 1ம் எதிரி 6ம் எதிரியை 2ம் திருமணம் செய்துக்கொண்டதாக கண்ணுற்ற சாட்சியான அ.சா.5 சாட்சியம் அளித்திருப்பனும், அ.சா.5னுடைய சாட்சியத்தில் 1ம் எதிரிக்கு எந்த நாளில் திருமணம் நடைபெற்றது என்று தனக்கு நினைவில்லை என சாட்சியம் அளித்துள்ளதும், தான் திருமணத்தை நேரடியாக பார்க்கவில்லை என சாட்சியம் அளித்துள்ளதும், மேலும் 1ம் எதிரி 6ம் எதிரியை இரண்டாவதாக திருமணம் செய்த அன்றே கொண்டையான்குப்பம் சென்று அ.சா.2 மற்றும் அ.சா.3*

*ஆகியோரிடம் தகவல் சொன்னதாக சாட்சியம் அளித்துள்ள நிலையில், அ.சா.5ன் உடைய சாட்சியத்தினை முரண்படுத்தும் விதமாக அ.சா.3 தான் சென்னையில் இருக்கும் போது அ.சா.5 1ம் எதிரி இரண்டாம் திருமணம் செய்த தகவலை தன்னிடம் சொன்னதாக சாட்சியம் அளித்துள்ளதும், அ.சா.5ன் உடைய சாட்சியத்தில் உள்ள முரண்பாடுகளையே காட்டுகிறது.*

*39. மேற்கண்ட சூழ்நிலையில், 1ம் எதிரி 6ம் எதிரியை இரண்டாம் திருமணம் செய்து கொண்டதை நேரடியாக பார்த்ததாக அ.சா.5 அரசு தரப்பால் முன்னிறுத்தப்பட்டிருப்பினும், அ.சா.5ன் சாட்சியத்தில் காணப்படுகின்ற முரண்பாடுகளானது, 1ம் எதிரி 6ம் எதிரியை இரண்டாவதாக திருமணம் செய்ததாக அரசு தரப்பில் சாட்டப்பட்ட குற்றச்சாட்டினை நிரூபிக்க அ.சா.5ன் உடைய சாட்சியமானது போதுமானதாக இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.*

*40. 1 மற்றும் 6ம் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டான அ.சா.1 உயிருடன் உள்ளபோது இரண்டாவதாக திருமணம் செய்ததாக அரசு தரப்பில் சாட்டப்பட்ட குற்றச்சாட்டினை கண்ணுற்ற சாட்சியான அ.சா.5ன் உடைய சாட்சியத்தின் மூலம் அரசு தரப்பால் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படாத நிலையில், அ.சா.5ன் உடைய சாட்சியத்தினை இவ்வழக்கினுடைய பிற சாட்சிகளின் சாட்சியங்கள் மூலமும் 1ம் எதிரி 6ம் எதிரியை இரண்டாவது திருமணம் செய்துகொண்டதற்கான தகுந்த ஆவணங்களின் மூலமும் அரசு தரப்பால் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.*

*41. மேற்கண்ட சூழ்நிலையில், இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.8 தனது முதல் விசாரணையில் அ.சா.1றிடம் புகார் பெற்றது குறித்தும், இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து சாட்சிகள் விசாரணை செய்து, எதிரிகளின் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்தது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார். இந்நிலையில் அ.சா.1 தனது சாட்சியத்தில் அ.த.சா.ஆ.1 ஆனது தன்னால் காவல் நிலையத்தில் அளிக்கப்பட்டது இல்லை என சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி புகார் குறித்து அ.சா.8 தனது குறுக்கு விசாரணையில்,*

> ***" அ.சா.1 தனது குறுக்கு விசாரணையில் வந்தவாசி காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். அந்த புகார் மை பேனாவில் எழுதியதுதான். அந்த புகார் ஒரத்தியார் என்பவர் எழுதியது என்றும், அதனை தான் நான் காவல் நிலையத்தில் கொடுத்தேன் என்றும், நான் கடைசியாக கொடுத்த புகாரும் அதுதான் என்று குறிப்பிட்டிருந்தால் அது தவறு."*** *என சாட்சியம் அளித்துள்ளார்.*

*42. மேற்படி அ.சா.8ன் உடைய சாட்சியமானது அ.சா.1ன் உடைய சாட்சியத்திற்கு முரண்பட்டு அமைந்துள்ளது. அ.சா.1 முதல் அ.சா.3 வரையான சாட்சிகள் தங்களது சாட்சியத்தில் காவல் நிலையத்தில் அளிக்கப்பட்ட புகாரானது ஓரத்தியார் என்பவரால் மை போனாவால் எழுதப்பட்டதாகவும், அதனை தான் தாங்கள் காவல் நிலையத்தில் அளித்ததாகவும், சாட்சியம் அளித்துள்ள நிலையில், அரசு தரப்பில் தட்டச்சு செய்யப்பட்ட புகாரினை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது எவ்வாறு என்பது குறித்து அரசு தரப்பில் தெளிவுப்படுத்தப்படவில்லை. மேலும் அ.சா.1 முதல் அ..சா.3 வரையான சாட்சியங்கள் மூலம் புகாரினை ஓரத்தியார் என்பவர் எழுதியுள்ள நிலையில், அரசு தரப்பில் மேற்படி நபர் ஏன் சாட்சியாக இவ்வழக்கில் சேர்க்கப்படவில்லை என்ற கேள்வியும் எழுகின்றது. மேலும், இவ்வழக்கில் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட பிராதான குற்றச்சாட்டான 1ம் எதிரி 6ம் எதிரியை இரண்டாவதாக திருமணம் செய்து கொண்டதாக சாட்டப்பட்ட குற்றச்சாட்டினை நிரூபிக்கும் விதமாக அ.சா.8-ஆல் இந்நீதிமன்றத்தில் எந்த ஒரு சான்றாவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை. மேற்படி சங்கதி குறித்து எதிரிகளின் தரப்பில் அ.சா.8 செய்யப்பட்ட குறுக்கு விசாரணையில்,*

> ***" 1ம் எதிரி இரண்டாம் திருமணம் செய்து கொண்டதால் தான் வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த இரண்டாம் திருமணம் ஆனது பெருமாள் கோவிலில் நடைபெற்றது என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் மேற்குறிப்பிட்டுள்ள கோயில் அர்ச்சகரை விசாரித்தேனா என்றால் இல்லை. இரண்டாம் திருமணம் செய்ததற்கான ரசீதினை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. நான் தெய்யார் கிராமத்திற்கு சென்று 2ம் திருமணத்திற்கு சென்ற தனி நபர் யாரையாவது விசாரித்தேனா என்றால் இல்லை".*** *என சாட்சியம் அளித்துள்ளார்.*

*43. மேற்படி அ.சா.8ன் உடைய சாட்சியத்தினை கூர்ந்து பரிசிலிக்கும் போது 1ம் எதிரி இரண்டாம் திருமணம் செய்துகொண்டதற்கான சாட்சிகளையோ, ஆவணங்களையோ அ.சா.8 இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்பது அ.சா.8 ஒப்புக்கொண்டுள்ளார். மேற்கண்ட முரண்பாடுகளானது அ.சா.8ன் புலன் விசாரணையில் உள்ள குறைபாடுகளை காட்டுவதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது.*

*44. மேற்கண்ட சூழ்நிலையில், இவ்வழக்கின் பிராதான சாட்சிகளான அ.சா.1 முதல் அ.சா.3, அ.சா.5 ஆகிய சாட்சிகள் மூலமும், செவி வழி சாட்சிகளான அ.சா.4 , அ.சா.6 மற்றும்*

*அ.சா.7 ஆகிய சாட்சிகளின் சாட்சியங்கள் மூலமும், அரசு தரப்பில் எதிரிகளின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களனாது சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படாத நிலையில், இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.8ன் சாட்சியமானது அரசு தரப்பு வழக்கினை உறுதியூட்டுவதற்கு போதுமானதாக இல்லை என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.*

*45. மேற்கண்ட ஆய்வுகளின் படியும், அ.சா.1 முதல் அ.சா.8 ஆகிய சாட்சிகளின் சாட்சியங்களில் காணப்படுகின்ற முரண்பாடுகளில் இருந்தும், அ.த.சா.ஆ.1 மற்றும் அ.த.சா.ஆ.2 ஆகிய சான்றாவணங்களை பரிசீலனை செய்ததிலிருந்தும், அரசு தரப்பில் எதிரிகளின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளான மனைசார் வன்கொடுமை செய்தது, கொலை மிரட்டல் விடுத்தது, 1ம் எதிரி 6ம் எதிரியை இரண்டாம் திருமணம் செய்தது மற்றும் வரதட்சணை கோரியது உள்ளிட்ட குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பால், சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கபடவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.*

***இறுதியாக, சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி பிரிவுகள் 498(A), 506(i), 494 உ/இ 109 இதச மற்றும் பிரிவு 4 வரதட்சணை தடுப்பு சட்டத்தின் படி எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்து எதிரிகளை கு.வி.மு.ச. பிரிவு 248(1) கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பு வழங்குகிறது. மேலும் எதிரிகள் எழுதி கொடுத்த பிணை பத்திரமானது மேல்முறையீட்டு காலத்திற்கு பின் ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.***

***இவ்வழக்கில் வழக்கு சொத்து இல்லை. எனவே, அது குறித்தான உத்தரவும் இல்லை.***

*இந்தத் தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத் திருத்தம் செய்த பின்னர் 2017-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 21-ஆம் நாளான இன்று இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.*

***(ஒம்/-கா.நிலவரசன்),***
*முதன்மை மாவட்ட உரிமையியல் மற்றும்*
*நீதித்துறை நடுவர், வந்தவாசி.*

***அரசுத் தரப்பு சாட்சிகள்:-***

*அ.சா.1 - ஜெயந்தி த/பெ. சிவகுமார்.*
*அ.சா.2- வீரம்மாள் க/பெ. பெருமாள்.*
*அ.சா.3- பெருமாள் த/பெ. பெரியசாமி.*

*அ.சா.4- ஆறுமுகம் த/பெ. சுப்பையா.*

*அ.சா.5- ஏழுமலை த/பெ. கோபால் பிள்ளை.*

*அ.சா.6- சகாதேவன் த/பெ. பட்டாபிராமன்.*

*அ.சா.7- தனசேகரன் த/பெ வீராசாமி கவுண்டர்.*

*அ.சா.8- சரஸ்வதி (புலன் விசாரணை அதிகாரி).*

***அரசுத் தரப்புச் சான்றாவணங்கள் :-***

*அ.த.சா.ஆ.1 - 13.02.2007 தேதியிட்ட புகார்.*

*அ.த.சா.ஆ.2- 13.02.2007 முதல் தகவல் அறிக்கை.*

***அரசுத் தரப்புச் சான்று பொருட்கள்:-*** ***இல்லை.***

***எதிரிகள் தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் :-*** ***இல்லை.***

***எதிரிகள் தரப்பு சான்று பொருட்கள் :-*** ***இல்லை.***

குறிப்பு

1. *வழக்கு விசாரணையின் போது எதிரிகள் பிணையில் இருந்தார்கள்.*
2. *தீர்ப்பு குறித்து சம்மந்தப்பட்ட காவல் நிலையத்திற்கு தெரிவிக்கப்பட்டது.*
3. *எந்தவொரு சாட்சியும் மூன்று தினங்களுக்கு மேல் நிறுத்திவைக்கப்படவில்லை.*
4. *தீர்ப்பு மாண்புமை தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், திருவண்ணாமலை அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.*

***(ஒம்/-கா.நிலவரசன்),***

*முதன்மை மாவட்ட உரிமையியல் மற்றும்*

*நீதித்துறை நடுவர், வந்தவாசி.*